# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,148 — 1935 ம் ஹூ புரட்டாதிமீ 27 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலககச சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கரைவாகுப்பற்றில் கல்முனைக்குடிக் கிராமத்தில் ஓர் பெண்பாடசாலை கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 213. குறிச்சி—கல்முனைக் குடியிருப்பு 4 ம் குறிச்சி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பனிச்சையடிவளவு | 12 கமுகு, 1 பனை, 2 மா, 8 தென்னை, 2 எலுமிச்சை முதலிய மரங்களும், வாழைகளும நிரந்தரமற்ற களிமண் குடிசையுமுள்ள வளவு | (1) மிராலெவ்வை அகமது லெவ்வை, (2) கதிரசாநலூர் உம்மா, கல்முனைக் குடியிருப்பு 4 ம் குறிச்சி | 0 | 0 | 26·2 |
| 2 | காரையடி வளவு .. | 7 தென்னை, 1 எலுமிச்சை, 1 வேம்பு முதலிய மரங்களும், வாழைகளும், நிரந்தரமற்ற களிமண் குடிசையுமுள்ள வளவு | கல்முனைக் குடியிருப்பு 4 ம் குறிச்சி அப்துல்லா சுலைமாலெவ்வை | 0 | 0 | 8·5 |
| 3 | முந்திரியடி வளயி .. | 2 தென்னைமரங்களுள்ள வளவு .. | (1) உமறுலெவ்வை மரைக்கார் சாறூஉம்மா, (2) மொகுதீன்வாவா பாத்தமுத்து, (3) உதுமான்கண்டு அவககா, கல்முனை குடியிருப்பு 4 ம் குறிச்சி | 0 | 0 | 27·6 |

எடுத்துக்கொள்வதற்கான எததனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருககிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஹூ (அகடோபர்) ஐப்பசி மாசம் 29 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு கல்முனை வாடிவீட்டில என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடைமைகளினது தன்மையையும் அவ்வுடைமைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்புக் கச்சேரி,
1935 ம் ஹூ புரட்டாதிமீ 24 ந் உ.

சி. சிற்றம்பலம்,
உதவி அரசாட்சி ஏசண்டு, மட்டக்களப்பு.

---

1876ம் ஹூ-த்து3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் துரை நீலாவணைக் கிராமத்தில் ஒரு சந்தை கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 212. குறிச்சி—மத்திய துரை நீலாவணைக் கிராமம், கரைவாகுப்பற்று.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | அயிலையடிவளவு | ஒரு வயதுள்ள 9 தென்னைமரங்களும் இரண்டு வயது வரையிலுள்ள 4 பனைமரங்களும் வாழைகளுமுள்ள வளவு | மத்தியதுரை நீலாவணை, நாகமுத்து கண்ணம்மா | 0 | 0 | 26·2 |

GP 85915

309——J. N. 49439—134 (9/39)
T 1

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு 3 ம் இலக்கக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஆண்டு ஐப்பசி மாசம் 29 ந் தேதியிலன்று மாலை 3 மணிக்குக் கல்முனை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

ஸீ. சிற்றம்பலம்,
உதவி அரசாட்சி ஏசண்டு, மட்டக்களப்பு.

மட்டக்களப்புக் கச்சேரி,
1935 ம் ஆண்டு புரட்டாதிமீ 24 ந் உ.

---

## நகர டிஸ்திறிக் சங்க அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல்.

### 1920 ம் ஆண்டு 11 ம் இலக்கத் தத்தமிட ஆளுகைச் சட்டம்.

### கொல்லனுவ நகர (டிஸ்திறிக்) சங்கம் அங்கத்தவர் தேர்தல்.

வருகிற கார்த்திகைமீ 7 ந் திகதி, வியாழக்கிழமையன்று கொல்லனுவை நகர (டிஸ்திறிக) சங்கத்திற்கு அங்கத்தவர்களை தேர்தல்செய்ய உத்தேசப்பட்டிருக்கிறதென்று இதனாலறிவிக்கப்படுகின்றது.

அங்கத்தவர்களாக தேரப்பட முன்வரும் ஒவ்வொருவருடைய பெயரும் எழுத்தில கொடுபடவேண்டும். அப்பெயர்கொண்ட பத்திரம் (நொமினேஷன் பேப்பர்) அப்பெயர்வழிகாரர் எந்தத் தெருவிலும் பிரிவிற்குத் தேரப்படுவதற்கென்று முன்வருகின்றாரோ அந்தப் பிரிவிற்கு அங்கத்தவரை தேர்தல்செய்ய யோக்கியதை உள்ளவர்களின் டாப்பில் தமது பெயர்கள் உள்ளவர்களாகிய கட்சி இருவராவது கையொப்பமிடப்பட்டு அப்பத்திரம் கொடுபடுவதற்கென்று நியமித்திருக்கும் 1935 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7 ந் திகதியன்று காலை 10 மணிக்கு அல்லது முன்னதாகவே கொல்லனுவ நகர (டிஸ்திறிக்) சங்கக் கந்தோரில் கொடுபடவேண்டும்.

ஏதாவதோர் பிரிவிற்கு அங்கத்தவர்களாகத் தேரப்படுவதற்கென்று ஒருவருக்கு மேலானவர்களின் பெயர்கள் கொடுக்கப்படுமாயிருந்தால் கீழே காட்டியபடி அப்பிரிவிற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் வாக்கு (வோட்) கொடுக்கும் இடத்திலும் திகதியிலும் வாக்கு (வோட்) எடுக்கப்படும். அவ்வாக்கு (வோட்) எடுத்தல் முற்பகல் 8 மணி தொடங்கி பிற்பகல் 5 மணிக்கு நிறுத்தப்படும்.

1935 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25 ந் திகதியன்று (வோட்) வாக்குக் கொடுக்குமிடங்கள்.

1 ம் பகுதிக்கு, கொத்தட்டுவ: கொத்தட்டுவவில் அங்கொட றோட்டுக்குச் சமீபமாயுள்ள முடிக்குரிய நிலத்தில் போடப்பட்டிருக்கும் கொட்டகை.

2 ம் பகுதிக்கு, எகொடகொல்லனுவ: டெமத்தகொடை—வெல்லம்பிட்டியா றோட்டிலிருந்து அங்கொட றோட்டுக்குத் திரும்பும் வழியில் முடிக்குரிய நிலத்தில் போடப்பட்டிருக்கும் கொட்டகை.

3 ம் பகுதிக்கு, நாகமுல்ல: கொல்லனுவ நகரசங்கக் கந்தோரடியில் போடப்பட்டிருக்கும் கொட்டகை.

4 ம் பகுதிக்கு, வெல்லம்பிட்டியா: உறுகொடவத்தை—அவிசாவலை றோட்டிலிருக்கும் ஏ. டி. எஸ். சூரியபண்டாரவினுடைய வளவில் போடப்பட்டிருக்கும் கொட்டகை.

5 ம் பகுதிக்கு, மீத்தோத்தமுல்ல: காலஞ்சென்ற பீ. என். கப்பாடியாவினுடைய "சியம்பலகசுவத்த" என்று சொல்லப்படும் நிலத்தில் போடப்பட்டிருக்கும் கொட்டகை.

6 ம் பகுதிக்கு, வேறகொட: வேறகொட புகையிரதப் பாலத்திற்கு மேற்குப் பக்கத்தில் புகையிரதத்துக்குரிய நிலத்தில் போடப்பட்டிருக்கும் கொட்டகை.

ஆர். எச். வைட்ஹோரான்,
அரசாட்சி ஏசன்றர், மேல்மாகாணம்.

கொழும்புக் கச்சேரி,
1935 ம் ஆண்டு புரட்டாதிமீ 25 ந் உ.

---

### 1920 ம் ஆண்டு 11 ம் இலக்க தத்தமிட ஆளுகை சட்டம்.

### மொறட்டுவா நகர (டிஸ்திறிக்) சங்கம் அங்கத்தவர் தேர்தல்.

வருகிற கார்த்திகை மாதம் 16 ந் திகதி சனிக்கிழமை மொறட்டுவா நகர (டிஸ்திறிக்) சங்கத்திற்கு அங்கத்தவர்களை தெர்தல்செய்ய உத்தேசப்பட்டிருக்கிறதென்று இத்தாலறிவிக்கப்படுகின்றது.

அங்கத்தவர்களாக தேரப்பட முன்வரும் ஒவ்வொருவருடைய பெயரும் எழுத்தில் கொடுபட வேண்டும். அப்பெயர்கொண்ட பத்திரம் (நொமினேஷன் பேப்பர்) அப்பெயர் வழிகாரர் எந்தத் தெருவிலும் பிரிவிற்குத் தேரப்படுவதற்கென்று முன்வருகிறாரோ அந்த பிரிவிற்கு அங்கத்தவரை தேர்தலசெய்ய யோக்கியதை உள்ளவர்களின் டாப்பில் தமது பெயர்கள் உள்ளவர்களாகியகட்சி இருவராவது கையொப்பமிடப்பட்டு அப்பத்திரம் கொடுபடுவதற்கென்று நியமித்திருக்கும் 1935 ம் ஆண்டு கார்த்திகைமீ 16 ந் திகதியன்று காலை 10 மணிக்கு அல்லது முன்னதாகவே மொறட்டுவா நகர (டிஸ்திறிக்) சங்கக் கந்தோரில, கொடுபட வேண்டும்.

ஏதாவதோர் பிரிவிற்கு அங்கத்தவர்களாகத் தேரப்படுவதற்கென்று ஒருவருக்கு மேலானவர்களின் பெயர்கள் கொடுபடுமாயிருந்தால கீழே காட்டியபடி அப்பிரிவிற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் வாக்கு (வோட்) கொடுக்குமிடத்திலும், திகதியிலும் வாக்கு (வோட்) எடுக்கப்படும்.

அவ்வாக்கு (வோட்) எடுத்தல் முற்பகல் 8 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 5 மணிக்கு நிறுத்தப்படும்.

| | வாக்கு (வோட்) கொடுக்குமிடங்கள் | திகதி, 1935. |
|---|---|---|
| 1 ம் பகுதிக்கு | லக்ஷபதியட் லக்ஷபதியவிலுள்ள சென்ற் மதியாஸ் பாடசாலை .. | கார்த்திகை 29 |
| 2 ம் பகுதிக்கு | உயன துணுவ வாடிவீட்டு நிலத்தில் போடப்பட்டிருக்கும் கொட்டகை .. | கார்த்திகை 29 |
| 3 ம் பகுதிக்கு | ருவத்தவத்தை, இதமவில் இருக்கும் நகர மண்டபம் (தவுன் ஹோல்) .. | கார்த்திகை 29 |
| 4 ம் பகுதிக்கு | மொறட்டுவெல்ல, மொறட்டுவெல்லவில் சென்ற் செபஸ்தியன் கோயிலுக்கு பின்னால் உள்ள றோமன் கத்தோலிக்க சுதேசப் பாடசாலை .. | கார்த்திகை 30 |
| 5 ம் பகுதிக்கு | கொறலவல்ல, கொறலவெல்லவில் சென்ற மைக்கேல்கோயில்நிலத்திலுள்ள றோமன் கத்தோலிக்க சுதேச பாடசாலை .. | கார்த்திகை 30 |
| 6 ம் பகுதிக்கு | கட்டுபொத்த, ருவத்தவத்தை றோட்டிலிருக்கும் றோமான் கத்தோலிக்க சுதேச பாடசாலை | கார்த்திகை 30 |
| 7 ம் பகுதிக்கு | மொறட்டுமுல்ல, மொறட்டுமுல்லவில் சென்ற அத்தோனிஸ் கோயில் நிலத்திலுள்ள றோமன் கத்தோலிக்க சுதேச பாடசாலை .. | கார்த்திகை 30 |
| 8 ம் பகுதிக்கு | இந்திபெத்த, சென்ற் மைக்கேல் கோயிலுக்குப் பின்னால் பொறலுவ றோட்டில் உள்ள அங்கிலீசியன் சுதேச பாடசாலை .. | கார்த்திகை 30 |

ஆர். எச். வைட்ஹோரான்,
அரசாட்சி ஏசண்டு, மேல்மாகாணம்.

கொழும்புக் கச்சேரி,
1935 ம் ஆண்டு புரட்டாதிமீ 20 ந் உ.

---

### 1920 ம் ஆண்டு 11 ம் இலக்க தத்தமிட ஆளுகைச் சட்டம் கோட்டே நகர (டிஸ்திறிக்) சங்கம்.

### அங்கத்தவர் தேர்தல்.

வருகிற கார்த்திகை மாதம் 21 ந் திகதி வியாழக்கிழமையன்று கோட்டே நகர (டிஸ்திறிக) சங்கத்திற்கு அங்கத்தவர்களை தேர்தல்செய்ய உத்தேசப்பட்டிருக்கிறதென்று இத்தாலறிவிக்கப்படுகின்றது.

அங்கத்தவர்களாக தேரப்பட முன்வரும் ஒவ்வொருவருடைய பெயரும் எழுத்தில் கொடுபடவேண்டும். அப்பெயர்கொண்ட பத்திரம் (நொமினேஷன் பேப்பர்) அப்பெயர் வழிகாரர் பிரிவிற்குத் தேரப்படுவதற்சென்று முன்வருகிறாரோ அந்தப் பிரிவிற்கு அங்கத்தவர்களை தேர்தல்செய்ய யோக்கியதை உள்ளவர்களின் டாப்பில் தமது பெயர்கள் உள்ளவர்களாகிய கட்சி இருவராவது கையொப்பமிடப்பட்டுஅப்பத்திரம் கொடுபடுவதற்கென்று நியமித்திருக்கும் 1935 ம் ஆண்டு, கார்த்திகை மாதம் 21 ந் திகதியன்று காலை 10 மணிக்கு அல்லது முன்னதாகவே கோட்டே நகர (டிஸ்திறிக்) கந்தோரில் கொடுபட வேண்டும்.

ஏதாவதோர் பிரிவிற்கு அங்கத்தவர்களாகத் தேரப்படுவதற்கென்று ஒருவருக்கு மேலானவர்களின் பெயர்கள் கொடுபடுமாயிருந்தால் கீழே காட்டியபடி அப்பிரிவிற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் வாக்கு (வோட்) கொடுக்குமிடத்திலும் திகதியிலும் வாக்கு (வோட்) எடுக்கப்படும். அவ்வாக்கு (வோட்) எடுத்தல் முற்பகல் 8 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 5 மணிக்கு நிறுத்தப்படும்.

| வாக்கு (வோட்) கொடுக்குமிடங்கள். | | திகதி 1935. |
|---|---|---|
| 1 ம் பகுதிக்கு | யக்பெத்த—வெலிக்கடையில் நகர சங்கத்துக்குரிய சந்தை .. .. | மார்கழி 13 |
| 2 ம் பகுதிக்கு | வெலிக்கட அரசாட்சிக்குரிய சுதேச பாடசாலை, நாவல | ,, 13 |
| 3 ம் பகுதிக்கு | நாவல—அரசாட்சிக்குரிய சுதேச பாடசாலை, நாவல | ,, 14 |
| 4 ம் பகுதிக்கு | எத்துல்கோட்டே—உவை. எம். பி. ஏ. மண்டபம் .. | ,, 13 |
| 5 ம் பகுதிக்கு | பிற்றகோட்டே பிற்றகொட்டேயில இருக்கும் நகர சங்கத்துக்குரியசந்தை .. | ,, 14 |
| 6 ம் பகுதிக்கு | பாகொட—மிரிகானையில கோட்டே—நுகேகொட றோட்டு பி. டபிள்யூ. டீ. கூவிலாயத்தில் போடப்பட்டிருக்கும் கொட்டகை | ,, 14 |
| 7 ம் பகுதிக்கு | நுகேகொட—நுகேகொட ரெயில்வே இஸ்டேசனுக்கு எதிரால் இருக்கும் நகர சங்கத்துக்குரிய நிலத்தில் போடப்பட்டிருக்கும் கொட்டகை .. | ,, 14 |
| 8 ம் பகுதிக்கு | கிரிலப்பனை—கிரிலப்பனையில் முதலியார் ஏ ஈ. அபயரெத்னவின் வீட்டுக்கு எதிராகவுள்ள மியூனிசிப் நிலத்தில போடப்பட்டிருக்கும் கொட்டகை .. | ,, 13 |

ஆர். எச். வைட்ஹோரன்,
அரசாட்சி ஏசன்றர், மேல்மாகாணம்.

கொழும்பு கச்சேரி,
1935 ம் ஆண்டு புரட்டாதிமீ 24 ௳.

## புத்தளம் டிஸ்திறிக் நகரசங்க அங்கத்தவர் தெரிவு, 1935.

இத்தாலறிவிப்பது என்னவானால் புத்தளம் டிஸ்திறிக் நகர சங்கத்திற்கு அங்கத்தவர் தெரிவு செய்வதற்காக பெயர் கொடுப்பதற்கு 1935 ம் ஆண்டு நவம்பர்மீ 15 ௳ திகதி வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்டிருக்கின்றது. அங்கத்தவராய்வர இருக்கும் ஒவ்வொருவரையும் எழுத்தில் பெயர் கொடுக்கப்படல் வேண்டும். அப்படி பெயர் கொடுக்கப்படும்பொழுது தெரிவுசெய்யப்பட, முன்வருபவர் எப்பகுதிக்கு தெரிவுசெய்யப்பட முன்வருகின்றாரோ அப்பகுதிக்குள் இருப்பவரும், அப்படிக்கண்டு வாக்குரிமை கொடுக்கத் தகுதி உள்ளவர்களின் டாப்பில் உள்ளவர்களுமாகிய, இருவருக்குக் குறையாத பேர்கள், பெயர்வரைந்து கொடுக்கும் அப்பத்திரத்தில் கையொப்பம் இட்டு புத்தளம் டிஸ்திறிக் நகர சங்கக் கந்தோரில் இதற்கென நியமிக்கப்பெறலுள்ள மேற்சொல்லிய 15 ௳ திகதியில் காலை 10 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக கொடுபடல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் பகுதி ஒன்றுக்கு ஒருவருக்குமேல் அங்கத்தவராக வர மனுப்பண்ணியிருந்தால் 1935ம் ஆண்டு டிசெம்பர் மாசம் 7 ௳ திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரையில் தெரிவுசெய்யும்கூட்டம் ஒன்று நிகழ்த்தப்படும். பலபிரிவுகளுக்கும் தெரிவுசெய்கிற இடங்களை அவ்வப்பிரிவின் நேர் வரைந்திருப்பதைக் காண்க:—

| | |
|---|---|
| பகுதி .. உவாட் நம்பர் 1 .. | அரசாங்க பெண்பிள்ளைப் பாடசாலை, யாட்பாணம் றோட்டு |
| பகுதி .. உவாட் நம்பர் 2 . | சென்ற் அண்டிறூ ஆண் பிள்ளைப் பாடசாலை, செட்டித் தெரு |
| பகுதி .. உவாட் நம்பர் 3 .. | டிஸ்திறிக் நகரசங்க ஆபீஸ் |
| பகுதி .. உவாட் நம்பர் 4 .. | கொன்வென்ற் பெண் பிள்ளைப் பாடசாலை, சோனக் குடியிருப்பு, அனுராசபுர றோட்டு |

ஏ. ஈ. கிறிஸ்ரோபல்ஸ்,
உதவி அரசாட்சி ஏஜன்று.

புத்தளம் கச்சேரி,
1935 ம் ஆண்டு புரட்டாதிமீ 21 ௳.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.